னர்களாக அமர்த்தப்படலாம் என்று பழைய அரசு விதித்திருந்தது. இப்பொழுது புதிய அரசு வந்த பிறகு 25 வயதுடையவர்கள்தான் ஓட்டுனர்களாக வரலாம் என்று விதிமுறைகள் திருத்தப்பட்டுள்ளன.

திரு. எம். எஸ். மணி : அமைச்சர் அவர்கள் பதில் கூறிய பொழுது பஸ் டிரைவர்கள் அதி வேகமாக ஓட்டுகிறார்கள் என்று புகார்கள் வந்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து இன்னொரு குறிப்பிட்ட இடத்திற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள்ளாகபோக வேண்டும் என்ற ஒரு விதி இருக்கிற காரணத்தினால், குறைந்த வேகத்தில் போனால், நேரம் அதிகமாகிவிடும் என்ற காரணத்தினால்தான் இவ்வளவு வேகமாகப் போக வேண்டியிருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்படிப்பட்ட ஓட்டுநர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள நேரம் போதாது என்று புகார் செய்வார்களேயானால், அந்த ரூட்களைப் பரிசிலித்துப் பார்த்து, சர்வே செய்து, உரிய நேரம் மீண்டும் கணக்கிடப்படுவதற்குத் துறையினர் இப்பொழுது முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : துரித வண்டிகள் வேகமாகச் சென்றதன் மூலம் இரண்டு பேர்கள் கோவையிலே செத்தார்கள் என்று திருமதி பழனியம்மாள் அவர்கள் கூறினார்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை என்று சொன்னார்கள். துரித வண்டிகளின் டிரைவர்களினால்தான் அப்படிப்பட்ட ஆக்ஸிடெண்ட் ஆகியிருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கீழ் அதிகாரிகள் கொண்டு வராமலே இருந்துவிட்டார்களா ? அப்படிப்பட்ட ஆக்ஸிடெண்டுகளை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வராமலேயே நிறுத்தி வைத்து விட்டார்களா என்பதைக் கூறுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கொண்டு வராமலேயே இருக்க முடியாது. இந்தத் தகவலை முன்பே அறிந்திருந்த திருமதி பழனியம்மாள் அவர்கள் பொது மக்களுக்கு உபகாரமாக, சர்க்காருக்கு அதை முன்பே தெரிவித்திருக்கலாம். அவர்கள் அந்தத் தகவலை சட்டமன்றத்தில் தெரிவிப்பது பெருமை என்று கருதிவிட்டார்கள். பைல் வரும் பொழுது அரசாங்கத்திற்குத் தகவல் தெரியும். அதிகாரிகளால் இன்னும் தெரிவிக்கப்படவில்லை. அதிகாரிகள் அதை மறைத்துவிட மாட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளி வைக்கப்பட்ட 150-ம் எண்ணுள்ள வினா இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும். திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களின் பெயரில் உள்ள வினாவை திரு. செ. பாலசுப்பிரமணியன் அவர்கள் கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 150, 151 எண்களுள்ள இரண்டு வினாக்களையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு வினாக்களுக்கும் பதில் அளிக்கிறார்கள்.

மின் உற்பத்தி.

***150 வினா—திரு வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் தொழில், விவசாயம் இவைகள் அபிவிருத்தி செய்ய வேண்டி மேலும் மின்சாரம் உற்பத்தி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

1968 மார்ச் 6]

(இ) 10 மெக்கர்வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் அளவுக்கு வசதியுள்ள இடங்களையும் பயன்படுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) நான்காம் திட்டக் காலத்தில் மின்சாரப் பணிகளுக்கென ரூ. 175·56 கோடி ஒதுக்கீடு செய்ய இவ்வரசு நினைத்துள்ளது. நான்காம் திட்டக்கால இறுதிக்கு கிர்ட்டின் (Grid) அமைப்புத் திறனை 1,079 M. W. இருந்து 1,805 M.W.-க்கு உயர்த்தவும் நினைத்துள்ளது. இம் மாநிலத்தின் மொத்த அமைப்புத் திறனை 2,515 M. W.-க்குக் கொண்டுவர, நெய்வேலி அனல் மின் நிலையத்தின் திறனையும் 600 M.W. -க்கு உயர்த்தப்படும்.

(இ) அதிக உற்பத்தித் திறனும், வருவாயும் தரும் பெரிய திட்டங்களை முடித்த பின்னர், சிறிய நீர் மின்சாரத் திட்டங்களின் ஆராய்ச்சி கவனிக்கப் படும்.

*151 **வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் அனல் மின் விசை நிலையங்கள் எத்தனை ? எங்கெங்கே இயங்குகிறது ?

(இ) மின்சார உற்பத்தியை அதிகப்படுத்த அனல் மின்விசை நிலையங் களை அதிகப்படுத்தும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) மூன்று—சென்னை, சமயநல்லூர், நெய்வேலி ஆகிய இடங்களில்.

(இ) அனல் மின்விசை நிலையங்களை அதிகப்படுத்தும் கொள்கையை ஏற்கனவே ஏற்று, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : ஒரு பக்கம் அதிகப்படியாக மின் சாரம் உற்பத்தியாகியும், நெய்வேலியில் உற்பத்தியாகிற மின்சாரம் முழு வதையும் சில சமயங்களில் எடுத்துக் கொள்ளவில்லை என்கிற குறை இருக்கிறது. மற்றொரு பக்கம் மின்சாரம் உற்பத்திக்கு மூலதனச் செலவு ஒரு ரூபாயாகவும், விஸ்தரிப்பதற்கு ரூ. 2½ ஆகவும் கணக்கிடப்பட்டிருப்ப தால், உற்பத்தியை அதிகரித்துக் கொண்டே போவதை விட்டுவிட்டு, ஏற்கனவே உற்பத்தியாகிற மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவ்வப்பொழுது இருக்கிற தேவையைக் கணக்கிட்டுத்தான் நாம் அதைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம். குறிப்பிட்ட காலத்தில், மழை காலத் தில் எங்கு பார்த்தாலும் உற்பத்தி ஏற்படுகிறபொழுது, நெய்வேலியி லிருந்து எடுக்கிற திறன் குறைந்துவிடுகிறது. குறைந்த அளவு இவ்வளவு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறியதற்கு இணங்க 1969–70 வரை ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டப்படி நெய்வேலியிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மின்சாரம் எடுக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது நம்முடைய மாநிலத் தேவையை நிறைவேற்று வதற்குக் கூட அண்மையில் மைசூர் மாநிலத்தோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம். அவர்களோடு நீர் மின்சாரம் பெறுவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம். ஒரு மிலியன் மெகவாட் வரையில் 5 காசு என்றும், அதற்கு மேல் எடுக்கப்படுவதற்கு 4½ காசு என்றும் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட அனல் மின்சாரம் உற்பத்தியாகிற விலைக்கு ஈடாக அந்த விலை வருகிற காரணத்தினால், நிலக்கரி நாட்டுக்கு மிகத் தேவை என்று நினைத்து, அதே அளவுக்கு உற்பத்திச் செலவுக்குக் கிடைக்கிற நீர் மின்சாரத்தை மைசூர் மாநிலத்தி லிருந்து நாம் பெறுகிற முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறோம். ஆனால், அவ்வப்பொழுது தேவையின் அடிப்படையில் உற்பத்தியை நாம் பெருக்கிக் கொண்டு வருகிறோம்.